**பாடம் - 13**

**الدرس الرابع عشر**

## ஷிர்க்-இணைவைத்தலும் அதன் வகைகளும்

## الشرك وأنواعه

ஷிர்க்- இணைவைத்தல் என்பது, அல்லாஹ்வினுடைய படைத்துப் பரிபாலிக்கும் ஆற்றலிலோ அல்லது அவனுடைய இறைத்தன்மையிலோ அல்லது அவனுடைய பெயர்கள், குணங்களிலோ அவனுக்கு இணையை ஏற்படுத்து வதாகும். பெரிய ஷிர்க், சிறிய ஷிர்க் என ஷிர்க் இரு வகைப்படும்.

**1.**பெரிய ஷிர்க்: இது வணக்கவழிபாடுகளில் ஒன்றை அல்லாஹ் அல்லாத வருக்குச் செய்வதாகும். இவ்வாறு செய்பவன் பாவமன்னிப்புத் தேடாமல் இறந்து விட்டால் நரகத்தில் நிரந்தரமாக இருப்பான். மேலும் இந்த ஷிர்க் அவனது நற்செயல்களை அழித்துவிடும்.

﴿ وَلَوْ أَشْرَكُوا لَحَبِطَ عَنْهُم مَا كَانُوا يَعْمَلُونَ ﴾ ﴿الأنعام: ٨٨﴾

அல்லாஹ் கூறுகிறான்: அவர்கள் இணை கற்பித்திருந்தால் அவர்கள் செய்த (நல்ல) வை அவர்களை விட்டும் அழிந்திருக்கும். (6:88)

தூய முறையில் பாவமன்னிப்புத் தேடினால்தான் பெரிய ஷிர்க்கை அல்லாஹ் மன்னிப்பான்.

﴿ إِنَّ اللهَ لا يَغْفِرُ أَنْ يُشْرَكَ بِهِ وَيَغْفِرُ مَا دُونَ ذَلِكَ لِمَنْ يَشَاءُ وَمَنْ يُشْرِكْ بِاللهِ فَقَدِ افْتَرَى إِثْمًا عَظِيمًا ﴾ ﴿النساء:٤٨﴾

அல்லாஹ் கூறுகிறான்: தனக்கு இணை கற்பிக்கப்படுவதை அல்லாஹ் மன்னிக்க மாட்டான். அதற்குக் கீழ் நிலையில் உள்ள(பாவத்)தை, தான் நாடியோருக்கு மன்னிப்பான். அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்பவர் மிகப் பெரிய பாவத்தையே கற்பனை செய்தார். (4:48)

பெரிய ஷிர்க்கின் வகைகளில் சில: அல்லாஹ் அல்லாதவரிடம் பிரார்த்திப்பது, அல்லாஹ் அல்லாதவருக்கு நேர்ச்சை செய்வது அல்லது அறுத்துப் பலியிடுவது போன்றவை. அல்லது அல்லாஹ்வையன்றி பல இணைக் கடவுள்களை ஏற்படுத்தி அல்லாஹ்வை நேசிப்பதுபோல அவர்களை நேசிப்பது.

﴿ وَمِنَ النَّاسِ مَنْ يَتَّخِذُ مِنْ دُونِ اللهِ أَنْدَادًا يُحِبُّونَهُمْ كَحُبِّ اللهِ ﴾ ﴿البقرة:١٦٥﴾

அல்லாஹ்வையன்றி அவனுக்கு இணைக் கடவுள்களை ஏற்படுத்தி அல்லாஹ்வை நேசிப்பது போல அவர்களை நேசிப்போரும் மனிதர்களில் உள்ளனர். (2:165)

**2.**சிறிய ஷிர்க்: குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்களில் இதற்கு ஷிர்க் என்றே சொல்லப்படும். ஆனாலும் இது பெரிய ஷிர்க் அளவுக்கு இருக்காது. இந்த வகை ஷிர்க் இறைமார்க்கத்திலிருந்து அவனை வெளியேற்றி விடாது. ஆனால் ஏக இறைக்கொள்கையில் இது குறைபாடுகளை ஏற்படுத்தும். உதாரணமாக சிறிதளவு முகஸ்துதி அல்லது பெரிய ஷிர்க்கின் அளவில் கொண்டு சேர்க்கக் கூடிய ஆனால் பெரிய ஷிர்க்காக இல்லாத காரியங்கள். உதாரணமாக அடக்கத் தலங்களில் தொழுவது, அல்லாஹ் அல்லாதவற்றின் மீது சத்தியம் செய்வது, அல்லாஹ்வையன்றி அவையும் நன்மையோ தீங்கோ செய்ய முடியும் என்ற நம்பி;க்கை இல்லாமல். அல்லாஹ் நாடியதும் இன்னார் நாடியதும் நடந்தது என்று கூறுவது, இன்னும் இது போன்றவைகள்.

لقول النبي ﷺ: (( أَخوفُ ما أَخافُ عليكم الشرك الأصغر )) ، فسُئل عنه ، فقال: (( الرياء )) ﴿رواه أحمد وإسناده جيد﴾

'நான் உங்கள் விஷயத்தில் அதிகம் அஞ்சுவது சிறிய ஷிர்க்கைத் தான்' என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். 'சிறிய ஷிர்க் என்றால் என்ன?' என்று அவர்களிடம் கேட்கப்பட்டதற்கு 'முகஸ்துதி' என்று விடையளித்தார்கள். (அஹ்மத்-23119)

قوله ﷺ : (( مَنْ حَلفَ بغير الله فقد أشرك )) ﴿رواه أبو داود: ٣٨٢٩﴾

அல்லாஹ்வை விடுத்து வேறொன்றின் மீது சத்தியம் செய்தவன் இணை வைத்துவிட்டான் எனவும் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (அஹ்மத்)

இந்த வகையில் சேரக்கூடிய எல்லா செயல்களும் சிறிய ஷிர்க் தான். உதாரணமாக நோய் மற்றும் துன்பங்களை நீக்கவும் அவை வராமல் தடுக்கவும் தாயத்து, தகடு கட்டித்தொங்கவிடுதல், கயிறு, வளையம் அணிதல் போன்றவை. நன்மை, தீமை ஏற்படுவதற்கு இவையும் ஒரு காரணம் என்றல்லாமல் இவையாவும் நேரடியாகவே நன்மை தீமை அளிக்கக்கூடியவை என்று கருதினால் இவையும் பெரிய ஷிர்க்கில் சேர்ந்துவிடும்.